# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 029/மா/2018
ஆணை நாள்: 26–2–2020

ஜூனியர் விகடன் மற்றும்
3.2.2018 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா
நாளிதழ் செய்தி. – தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

மாநகராட்சி ஆணையர்,
மதுரை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

மதுரை மாநகராட்சியில் அரசு கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களுக்கான சொத்துவரி வசூலிக்கப்படாமல் பெருந்தொகை நிலுவையாக உள்ளது என தெரிவித்து ஜூனியர் விகடன் வார இதழிலும், மற்றும் 03.02.2018 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழிலும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. இச்செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்து, முறையீட்டு மனு எண். 029/2018 என எண்ணிடப்பட்டது. பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் மற்றும் பெறப்பட்ட அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை:

மதுரை மாநகராட்சியில் அரசு கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களுக்கான சொத்துவரி வசூலிக்கப்படாமல் பெருந்தொகை நிலுவையாக உள்ளது என ஜூனியர் விகடன் மற்றும் 03.02.2018 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழிலும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. திரு. வள்ளுவன் முருகேசன் என்பவர் 10.2.2018 அன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட செய்தியில் இதே புகாரினை தெரிவித்து, மதுரை மாநகராட்சியில் வரிசெலுத்தத் தவறிய இரு வணிகவளாகங்கள் முன்பாக குப்பைகள் நிரம்பிய இரண்டு பெரிய தொட்டிகளை மாநகராட்சி அதிகாரிகள் வைத்து சென்றனர் என்றும், இதனால் துர்நாற்றம் வீசுவதால், பொதுமக்கள் அவதிப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். சில ஆயிரம் ரூபாய் வரிபாக்கி வைத்துள்ள சாமான்ய மக்களிடம் இவ்வாறு நடந்து கொள்ளும் மாநகராட்சி அதிகாரிகள், பல கோடி ரூபாய் வரிபாக்கி வைத்துள்ள கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. கே. ஹக்கிம் என்பவர் தனது 23.2.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட ஒரு சாலை அமைப்பதற்கு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டு அந்த சாலை அமைக்க முடியாமல் போனதால், கடந்த 02.02.2018 ஆம் தேதி அன்று மதுரை மாநகராட்சி ஆணையர், சென்னை உயர்நீதி மன்று மதுரை கிளையில் ஆஜராகி கடுமையான நிதிப்பற்றாக்குறை காரணமாக சாலை அமைக்க இயலவில்லை என்றும், மதுரை மாநகராட்சிக்கு 168 கோடி ரூபாய் வரிபாக்கி உள்ளது என்றும், அதனால் தான் சாலை அமைக்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டதாகவும், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளை மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வரி செலுத்துவோர் நான்கு வாரத்திற்குள் வரிசெலுத்த வேண்டும், தவறினால் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மூடி சீல் வைக்க உத்தரவிட்டுள்ளது என்றும் அவ்வாறு உத்தரவிட்டபட்டதும், ஏற்கனவே ரூ.47,64,45,282/- பாக்கி வைத்திருக்கும் முதல் 100 நபர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டு இருந்த நிலையில், இப்பட்டியல் மாற்றம் செய்யப்பட்டு உடனடியாக ரூ.13,62,86,516/- வரிபாக்கி வைத்திருக்கும் 100 நபர்களின் புதிய பட்டியல் வெளியிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி ஆணையருக்கு மேற்கண்ட புகார் சம்மந்தமாக தனது அறிக்கையினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 20.2.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் ஆணையிப்பட்டது. அதன்படி, மதுரை மாநகராட்சி உதவி (வருவாய்) ஆணையர் தனது 31.1.2020 நாளிட்ட அறிக்கையில் திரு. சுந்தரராஜ் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WP (MD) No. 17339/17 தீர்ப்பாணை நாள் 02.02.2018 ல் சொத்துவரி நிலுவை முழுவதையும் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிடப்பட்டது என்றும், அதன்படி மதுரை மாநகராட்சியில் நான்கு மண்டல உதவி ஆணையாளர்களுக்கும் 12.03.2018 ல் குறிப்பு அனுப்பப்பட்டு, சுவான்தாரர்களுக்கு ஜப்தி, நோட்டீஸ், அனுப்பி சொத்துவரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்றும், நான்கு மண்டலங்களிலும் உதவி ஆணையாளர்கள் மற்றும் உதவி வருவாய் அலுவலர்கள் தலைமையில் சொத்துவரி வசூல் செய்ய குழு அமைக்கப்பட்டு வசூல் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், ஆணையாளர் அவர்களால் வசூல் பணி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மட்டும் மேற்படி நடவடிக்கைகளினால் ரூ. 20,86,77,367/- வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும், சொத்துவரி மற்றும் இதர வரிகள் அனைத்தும் தொடர்ந்து வசூல் செய்ய கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் வரிவசூல் தொடர்பாக வரித்தண்டலர்களுக்கான ஆய்வு கூட்டம் நடத்தும் போது விரைவாக வசூல் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு கணினியில் மாநகராட்சி இணையதளத்தில் 100 நபர்கள் பட்டியலை இணையதளத்தில் வெளியிடுமாறு தெரிவித்ததின் அடிப்படையில் மதுரை மாநகராட்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டது என்றும், முதலில் மாநகராட்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்த சொத்துவரி அதிகமாக நிலுவை வைத்துள்ள 100 நபர்களுக்கான (Top Defaulter list) பட்டியலில் ரூ. 47,64,45,282/- என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் மாநகராட்சிப் பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்கும் போது வணிக அடிப்படையில் வரி நிர்ணயம் செய்த கேட்பின் (Demand)

அடிப்படையில் இணைய தளத்தில் நிலுவை தொகை விபரம் வெளியிடப்பட்டது என்று தெரிவித்து, அதன் விபரத்தினை கீழ்க்கண்டவாறு பட்டியலிட்டுள்ளார்.

| வ. எண். | விபரம் | பட்டியல் விவரம் | வெளியிடப்பட்ட தேதி | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | முதல் முறை இணையதளத்தில் வெளியிடப்பட்ட விபரம் | முதல் முறை வெளியிடப்பட்ட Top 100 பட்டியல் | 15.12.2017 | 47,64,45,282 |
| 2. | முதல் முறை இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு நீக்கம் செய்யப்பட்ட விபரம் | 90 வரி விதிப்பு எண்கள் நீக்கம் | – | 45,27,31,348 |
| 3. | முதல் முறை இணையதளத்தில் ஏற்கனவே வெளியிடப்பட்டு நீக்கம் செய்யாதவை | 10 ஏற்கனவே உள்ளவை | – | 2,37,13,934 |
| 4. | இரண்டாம் முறை இணையதளத்தில் வெளியிடப்பட்ட விபரம் | இரண்டாம் முறை வெளியிடப்பட்ட Top 100 பட்டியல் | 02.02.2018 | 13,62,86,516 |

முதல் முறை இணையதளத்தில் வெளியிடப்பட்ட 100 வரி விதிப்பு எண்கள் (Top Defaulter list) பட்டியலில் இருந்து, அரசு கட்டடம் மற்றும் கல்வி நிறுவனங்களில் தொடர்பான வரிவிதிப்புகளை நீக்கம் செய்ததால் பட்டியலில் அடுத்த படியாக இருந்த 90 வரி விதிப்புகள் பட்டியலில் தானாக (Automatically generated) சேர்ந்துள்ளது என்றும், அதன் தொகை ரூ.11,25,72,582/- ஆகும் என்றும், மேலும், ஏற்கனவே நீக்கம் செய்யப்படாமல் இருந்த 10 வரி விதிப்புகள் தொகை ரூ.2,37,13,934/- சேர்ந்து ஆக மொத்தம் ரூ.13,62,86,516/- இரண்டாவது முறையாக இணையதளத்தில் வெளியிடப்பட்டது என்றும், கல்வி நிறுவனங்கள் ஏற்கனவே வழக்கு தொடர்ந்திருந்த காரணத்தினாலும் மற்றும் தமிழக அரசுக்கு சொந்தமான அலுவலக கட்டடங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாத இறுதியில் சொத்துவரி செலுத்தப்பட்டுவிடும் என்பதால் அரசு கட்டடங்களுக்கான சொத்துவரி பட்டியலும் இணையதளத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட்டது என்றும், எனவே இந்த இரண்டு பட்டியல்களும் 100 (Top Defaulter list) நபர்கள் கொண்ட பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதால் சொத்துவரி பாக்கி பட்டியலில் தொகை ரூ.13,62,86,516/- என குறைக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டிருந்த செய்திகள், மனுதாரரின் கோரிக்கை மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, உதவி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. மாநகராட்சி நிர்வாகம் சொத்துவரியினை வசூல் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், இம்மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாமென முடிவு செய்து ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

18/3/2020

பெறுநர்:

1) திரு. K. ஹக்கீம்,
1வது தெரு, கீழவெளிவீதி,
மதுரை 625 001.

2) ஆணையர், மதுரை மாநகராட்சி,
மதுரை.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்